பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 04 2026 MONDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜனநாயக அமைப்பில் மகளிருக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. நாட்டின் விடுதலைக்காக ஜாலியன் வாலாபாக்கில் உயிர் தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

3. மேற்குவங்க இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள இன்று கடைசி நாளாகும்.

4. சட்டீஸ்கரில் காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் இரண்டு நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் அணி இன்று ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

... இனி விரிவான செய்திகள்...

<<<<<>>>>>>

ஜனநாயக கட்டமைப்பில் மகளிருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மகளிர் சக்தி மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் ஜனநாயகத்தை பெண்களின் பங்களிப்பு வலுப்படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மசோதாவை நிறைவேற்ற இம்மாதம் 16-ஆம் தேதி தொடங்கும் சிறப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் பெண்களின் அதிகாரத்திற்கான ஆக்கப்பூர்வமான கருத்துகளை முன்வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னப்பூர்ணா தேவி, நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டம் பெண்களின் அதிகாரத்தையும், சுயமரியாதையையும் உயர்த்தியுள்ளதாக கூறினார்.

ஜனநாயக நடைமுறைகளில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்பதற்கான வாய்ப்பை அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் தலைமையிலான வளர்ச்சி என்ற தொலைநோக்கு இலக்கை எட்டுவதற்கும் இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக அரங்கில் இந்திய பெண்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 30 ஆண்டுகளாக மகளிர் முன்னேற்றத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பிரதமர் திரு நரேந்திர மோடி அதனை சாத்தியமாக்கிக் காட்டியுள்ளதாக அவர் கூறினார்.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம், அவர்கள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சிக்கு அதிக பங்களிப்பை செலுத்த முடியும் என்றும் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாட்டின் விடுதலைக்காக ஜாலியன் வாலாபாக்கில் உயிர்த் தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 1919-ஆம் ஆண்டு

இதேநாளில் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் துயர சம்பவம் நாடு முழுவதும் விடுதலை வேட்கையை தூண்டியதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகம், சுதந்திரம், நீதி மற்றும் கண்ணியத்தை எதிர்கால சந்ததியினருக்கும் உணர்த்தும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், நிராயுதபாணியாக அடைத்து வைக்கப்பட்ட மக்களை துப்பாக்கியால் சுட்டு நடத்தப்பட்ட ஆங்கிலேய ஆதிக்கத்தின் வன்முறையை வெளிப்படுத்தியதாகவும், இதனால், நாடு முழுவதும் சுதந்திர வேட்கைக்கான தீ கொழுந்துவிட்டு எரிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் தியாகத்தின் வெளிப்பாடாக ஜாலியன் வாலாபாக் சம்பவம் அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

மின்சார உந்து சக்தியின் மூலம், விமானங்களை **Take off** செய்வதற்கான தொழில்நுட்பம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்திய தொழில்நுட்ப வாரியத்திற்கும், **Casey** விமான நிறுவனத்துக்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது.

அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு இந்த நவீன தொழில்நுட்பம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

குறைந்த தூர ஓடுதளத்தில் விமானம் **Take off** செய்வதற்கும் சிறிய வகை விமானங்கள் செங்குத்தாக மேலெழும்பி செல்வதற்கும் இந்த தொழில்நுட்பம் பயன்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மும்பையில், நேற்று காலமான முதுபெரும் பின்னணி பாடகி ஆஷா போஸ்லே-யின் உடலுக்கு முக்கிய பிரபலங்கள் இன்று அஞ்சலி செலுத்தினர்.

முதுபெரும் இயக்குனரும், நடிகையுமான ஆஷா பரேக், இசையமைப்பாளர் ஏ ஆர் ரகுமான், இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சுப்ரியா சுலே, மும்பை மேயர் **Ritu Tawade** ஆகியோரும் ஆஷா போஸ்லே-விற்கு அஞ்சலி செலுத்தினர்.

<<<<<>>>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட சில தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 191 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>

மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள இன்று கடைசிநாளாகும்.

இம்மாநிலத்தில் **142** தொகுதிகளில் இம்மாதம் **29-**ஆம் தேதி இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகளை, மூத்த துணைத் தேர்தல் ஆணையர்கள் திரு **Gyanesh Bharti,** திரு பவன்குமார் ஷர்மா ஆகியோர் இன்று நேரில் ஆய்வு செய்கின்றனர்.

மூன்று நாட்கள் மாநிலத்தில் உள்ள மாவட்ட அளவிலான அதிகாரிகள், காவல்துறை மூத்த அதிகாரிகள் ஆகியோருடன் தேர்தல் தயார் நிலை குறித்து ஆய்வு செய்கின்றனர்.

<<<<<>>>>>>

சட்டீஸ்கரின் **Kankar** மாவட்டத்தில் உள்ள **Machpalli** என்ற இடத்தில் காவல்துறையினர் தேடுதல் வேட்டை மேற்கொண்டிருந்தபோது, ஒரு பெண் உட்பட இரண்டு நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

<<<<<>>>>>>

இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பெரிய நாடுகள் மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட மேற்கொள்ளும் முயற்சிகளை வரவேற்பதாக மும்பையில் உள்ள ஈரான் தூதர் திரு **Saeid Reza Mosayeb** தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவின் ராஜ்ய ரீதியிலான அணுகுமுறை வரவேற்கத்தக்கது என்றும் கூறினார்.

ஈரான் மீதான தாக்குதலில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை இந்த நாடுகள் ஆதரிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ராணுவ ரீதியாக இந்த போர் சூழலில் ஈடுபட விருப்பம் இல்லை எனவும் இந்த மூன்று நாடுகளும் தெளிவாக கூறியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

போர்ச்சூழலை கட்டுக்குள் கொண்டுவந்து, உலகச் சந்தை நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள இந்த நாடுகள் முயற்சி எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

**ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் அணி இன்று ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.**

**ஹைதராபாதில் இரவு மணி 7.30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.**

**<<<<<END>>>>>**